THE HINDU- ENGLISH
Dated:19.03.2025

# EC sets ball rolling on linking voter ID cards with Aadhaar

**The Hindu Bureau**
NEW DELHI



**Plan in motion:** Chief Election Commissioner Gyanesh Kumar and other officials during a high-level meeting in Delhi. PTI

The Election Commission (EC) on Tuesday set the ball rolling for linking Aadhaar with elector photo identity card (EPIC) numbers. The poll body said it would soon begin technical consultations with the Unique Identification Authority of India (UIDAI) on the issue.

The decision was made after a high-level meeting of the full commission, led by Chief Election Commissioner Gyanesh Kumar, an official statement said.

Commenting on the EC statement on its intent to link EPIC numbers with Aadhaar, the Empowered Action Group of Leaders and Experts (EAGLE) of the Congress in a statement said the EC must consult all political parties and other stakeholders and assure them that "there are sufficient guardrails to not deny a single eligible voter the right to vote".

The Election Commission, however, said linking of EPIC with Aadhaar would only be done under provisions of Article 326, which says voting rights can only be given to citizens. Aadhaar card only establishes the identity of a person.

It further said the linking would also take into effect as per the provisions of Sections 23(4), 23(5) and 23(6) of the Representation of the People Act, 1950 and in line with the Supreme Court judgment in WP (civil) No. 177/2023.

This in effect means that linkage would be done only in cases where Aadhaar has been submitted voluntarily by the elector.

The Hindu (English), Dated: 19.03.2025

# EC relents, to hear pleas to upload booth-wise turnout

Supreme Court Bench directs petitioners to make representation before poll panel in 10 days; they have sought authenticated, scanned, legible account of votes after each phase of polling

**Krishnadas Rajagopal**
NEW DELHI

The Supreme Court on Tuesday asked the Election Commission to meet with petitioners and hear their demand to upload on its official website authenticated, scanned, and legible account of votes recorded booth-wise after each phase of polling.

A Bench headed by Chief Justice Sanjiv Khanna directed Lok Sabha member Mahua Moitra and representatives of the Association for Democratic Reforms (ADR) to make their representation before the EC in 10 days. The panel agreed to grant the petitioners a hearing to resolve the issues.

The panel's willingness to do so signalled a mellowing of its stance with a new Chief Election Commissioner, Gyanesh Kumar, at its helm. An affidavit filed by the EC in the Supreme Court in May 2024 had taken an uncompromising position against the public disclosure of turnout data. It had argued there was no such "legal mandate" to provide the data to any person other than candidates or polling agents.

The ADR had primarily sought the uploading of scanned copies of Form 17C (account of votes recorded) after every phase of polling in the 2024 Lok Sabha polls.

CONTINUED ON
» PAGE 14

## Case file

The demand for EC to publish booth-level voter turnout data follows other attempts to make the poll process more transparent. Here are the two sides:

**Petitioners' stance**

- Delay in publishing voter turnout data followed by a sharp spike in figures from polling percentages in the 2024 Lok Sabha election
- 'Wide discrepancy' between the count of voters at poll booths and the voter turnout published later on
- Suspicions of switching of electronic voting machines

**EC affidavit in May 2024**

- There was no 'legal mandate' to provide the data to any person other than candidates or their polling agents
- Form 17C to be shared only with candidates and their agents
- Turnout is being released through a voter turnout app, website, and press releases




## EC begins steps to link voter ID with Aadhaar

NEW DELHI

The Election Commission (EC) on Tuesday set the ball rolling for linking Aadhaar with elector photo identity card (EPIC) numbers. The commission said that it would soon begin technical consultations with the UIDAI on the issue. The decision was made after a high-level meeting led by Chief Election Commissioner Gyanesh Kumar. » PAGE 15

## From Page One

## EC to hear pleas on booth-wise turnout

Rule 49S and Rule 56C (2) of the Conduct of Election Rules, 1961 require the Presiding Officer to prepare an account of votes recorded in Form 17C (Part I) format.

The NGO had alleged an inordinate delay in publishing voter turnout details followed by a sharp spike in figures from the initial voter turnout percentages released by the EC in the 2024 Lok Sabha election. The development, according to the ADR, had rung alarm bells about the authenticity of the polling data available in the public domain, and raised suspicions on whether the electronic voting machines were switched.

On Tuesday, senior advocate Abhishek Singhvi, representing Ms. Moitra, submitted that the EC's reticence to divulge the total voter turnout data from all polling booths may be "to avoid a macro picture for analysis and disclosure".

"Citizens have a right to know. The Supreme Court had intervened in other cases to ensure that citizens knew the criminal antecedents of candidates... In a democracy, we need to know, that's all," senior advocate Prashant Bhushan emphasised.

Mr. Singhvi said there was a "wide discrepancy" between the count of voters at poll booths and the voter turnout published later on.

THE HINDU- ENGLISH

Dated: 19.03.2025

# Dhankhar to hold talks to decide on Opposition demand for EPIC debate

The Hindu Bureau
NEW DELHI

On a day the Opposition decided to halt its protests in the Rajya Sabha on duplication of elector photo identity card (EPIC) numbers, Vice-President and Rajya Sabha Chairperson Jagdeep Dhankhar told the House that he would hold consultations to decide on the Opposition's demand for a debate on the issue.

Mr. Dhankhar rejected notices moved under Rule 267, which requires suspension of the day's business to discuss the issue at hand, by Aam Aadmi Party MP Sanjay Singh on the EPIC matter and BJP MP Samik Bhattacharya on the non-implementation of a Central scheme in West Bengal.



Jagdeep Dhankhar

"It is not anyone's intention to disrupt this House. We want the House to run. Members have important issues to raise in Zero Hour. We want your kind consideration to allow [a] short duration [discussion] on the issue of duplication of EPIC numbers, which has been raised by several parties," Trinamool Congress Parliamentary Party leader in the Rajya Sabha Derek O'Brien said.

He was seconded by Dravida Munnetra Kazhagam floor leader Tiruchi Siva, who supplemented the request with the demand for a similar discussion on the impending delimitation exercise, which Tamil Nadu Chief Minister and party president M.K. Stalin has said would punish the southern States by diminishing their representation in Parliament.

"I will confer with leaders of the parties and come back to the House at the earliest," Mr. Dhankhar said.

## Gokhale's demand

The Opposition managed to get a word in on the EPIC duplication issue when Trinamool MP Saket Gokhale spoke during Zero Hour on the demand for conferring the Bharat Ratna posthumously on T.N. Seshan, former Chief Election Commissioner. He said Mr. Seshan redefined the way the Election Commission functioned. "Mr. Seshan was a fiercely independent Election Commissioner. His famous quote, 'I eat politicians for breakfast,' shows that he worked without fear or favour, and upheld the independence and dignity of the Election Commission," Mr. Gokhale added.

Mr. Seshan would not have approved of the current method of appointment of Election Commissioners, the MP added. "Today, Election Commissioners are appointed directly by the government-...without any presence of the Chief Justice of India or the Leader of the Opposition in Lok Sabha. The EC has become a government-appointed body. T.N. Seshan would not approve of it," Mr. Gokhale said.

DECCAN CHRONICLE Dated: 19.03.2025

# EC to soon consult UIDAI for Aadhaar-Epic linking

VINEETA PANDEY | DC
NEW DELHI, MARCH 18

In a bid to resolve the issue of duplicate elector photo identity card (Epic) numbers, the Election Commission of India (ECI) will soon begin technical consultations with Unique Identification Authority of India (UIDAI) experts on Aadhar-voter card seeding. The ECI said this would be done as per provisions of existing laws and the Supreme Court's directions.

It was not clear if Aadhar-Epic seeding will be done only for contentious and duplicate voter cards or for all. Sources in ECI said this was the first meeting and the modalities on how to go about cleaning the duplicate voter numbers, as per provisions of existing laws, will be worked on in the coming days.

It is learnt that the ECI will use its upgraded software to detect all duplicate numbers and ghost voters. ■ P7

## 'PRESENT DEMAND FOR BOOTHWISE DATA TO EC'

DC CORRESPONDENT
NEW DELHI, MAR 18

Noting the Election Commission's submission that it was willing to deliberate over the demand for uploading polling booth-wise voter turnout data on its website, the Supreme Court on Tuesday asked the petitioners to make representations before the poll panel in 10 days.

A bench comprising Chief Justice of India Sanjiv Khanna and Justices Sanjay Kumar and K.V. Viswanathan was hearing two public interest litigations filed by TMC MP Mahua Moitra and NGO Association for Democratic Reforms in 2019. ■ P7

# EC and UIDAI's tech talks for voter card & Aadhaar linking soon

FROM PG 1

The software will be available to electoral registration officers (EROs) in states and Union Territories to detect multiple names attached to a particular EPIC number, or the same person having multiple voter cards. The ECI may also use Artificial Intelligence, biometrics and face detection technology in future to weed out fraudulent activities.

The meeting was presided by Chief Election Commissioner of India (CEC) Gyanesh Kumar and was attended by ECs Dr Sukhbir Singh Sandhu, Dr. Vivek Joshi, Union government secretaries for home and legislative departments, Secretary MeitY and CEO, UIDAI and technical experts present. The CEC had said the issue of duplicate Epic will be resolved within three months.

"As per the Article 326 of the Constitution of India, voting rights can only be given to a citizen of India; an Aadhar card only establishes the identity of a person. Therefore, it was decided that the linking of Epic with Aadhaar will be done only as per the provisions of Article 326 of the Constitution, Section 23(4), 23(5) and 23(6) of the Representation of the People Act, 1950 and in line with the Supreme Court judgement in WP (civil) No. 177/2023. Accordingly, technical consultations between UIDAI and the technical experts of ECI are to begin soon," the ECI said in a statement.

## Representations to EC in 10 days: SC on voter turnout data

FROM PG 1

The PILs sought a direction to the poll panel to upload polling station-wise voter turnout data on its website within 48 hours of conclusion of polling in the Lok Sabha and Assembly elections.

Senior Advocate Maninder Singh, representing the Election Commission of India, said Chief Election Commissioner Gyanesh Kumar wanted to meet and discuss the grievance.

TIMES OF INDIA
Dated : 19.03.2025

# Poll panel set to tap UIDAI to iron out EPIC-Aadhaar linkage wrinkles

**Bharti.Jain**@timesofindia.com

**New Delhi:** The Election Commission will begin technical consultations with the Unique Identification Authority of India (UIDAI) soon to sort out issues in linking electors' photo identity card (EPIC) with Aadhaar, including those arising from different eligibility criteria and purposes served by the two documents.

The decision to start discussions between technical teams of EC and UIDAI was taken at a meeting held here on Tuesday by the commission, represented by chief election commissioner **Gyanesh Kumar** and election commissioners S S Sandhu and Vivek Joshi; secretaries of ministry of home affairs, legislative department and ministry of electronics and IT (MeiTY); and the UIDAI chief executive officer, besides technical experts from both EC and UIDAI.



While an EPIC can only be issued to a person who fulfils the criteria and conditions outlined by Article 326 — being an Indian citizen, age 18 years and above, ordinarily resident in the polling booth where registering, and not disqualified from voting under any law on grounds of non-residence, unsoundness of mind, crime or corrupt or illegal practice — Aadhaar only establishes identity of a person through photograph and biometrics like fingerprints and iris scan. Technical consultations between EC and UIDAI seek to devise a foolproof system such that a person cannot claim voting right solely on the basis of Aadhaar. Only if the person fulfils all criteria under Article 326 can he vote, with Aadhaar use limited to establishing identity through biometric authentication. "While, as per Article 326 of the Constitution, voting right can only be given to a citizen of India, Aadhaar card only establishes the identity of a person," EC said on Tuesday.

It said the linking of EPIC with Aadhaar will be done as per Article 326; Section 23(4), 23(5) and 23(6) of the Representation of the People (RP) Act, 1950; and Supreme Court judgement in writ petition (civil) No. 177/2023.

THE NEW INDIAN EXPRESS
Dated: 19.03.2025

# SC asks EC to examine pleas seeking disclosure of turnout data in 48 hours

SUCHITRA KALYAN MOHANTY
@ New Delhi

THE Supreme Court on Tuesday asked the Election Commission of India (ECI) to examine pleas seeking disclosure of final authenticated data of voter turnout in all polling stations within 48 hours of the polling. A three-judge bench, comprising Chief Justice Sanjiv Khanna and Justices Sanjay Kumar and KV Viswanathan, was hearing two PILs filed by Trinamool Congress MP Mahua Moitra and NGO Association for Democratic Reforms (ADR) in 2019.

The top court noted the ECI's submission that it was willing to deliberate over the demand for uploading polling booth-wise voter turnout data on its website. It asked the petitioners to make representations before the poll panel in 10 days.

Senior advocate Maninder Singh, appearing for the poll panel, said Chief Election Commissioner Gyanesh Kumar wanted to discuss the grievance.

The CJI then said, "In the meanwhile, the counsel for EC states that the petitioners (the NGO and MP) may file a representation with the Election Commission and the EC will give them a hearing and inform them in advance. Let the representation be made in 10 days."

During the hearing, advocate Prashant Bhushan, appearing for the NGO, said there were huge discrepancies on the EVM count and the number of persons coming to cast vote at the polling stations.

D.T. NEXT
Dated: 19.03.2025

# EC, UIDAI hold talks on Aadhaar-voter ID seeding

NEW DELHI: The EC on Tuesday said linkage of voter cards with Aadhaar would be done according to the prevailing law and the Supreme Court's directions and added technical consultations between its experts and UIDAI for the exercise would 'begin soon.'

The Election Commission (EC) on Tuesday held a meeting with the Union home secretary, legislative secretary (in the law ministry), MeitY secretary and the UIDAI CEO on the issue of voter card-Aadhaar seeding.

The government told the Rajya Sabha in a written reply in April 2023 that linking Aadhaar details with voter identity cards had not started and noted that the exercise was 'process driven' and no target or timelines was set for the proposed exercise.

Names of those who do not link their Aadhaar details with the voters' list will not be struck off the electoral rolls, the government had asserted.

In a statement on Tuesday, the poll authority said that while voting rights could only be granted to a citizen of India, according to Article 326 of the Constitution, Aadhaar established a person's identity.

"Therefore, it was decided that the linking of elector photo identity card (EPIC) with Aadhaar will be done only as per the provisions of Article 326 of the Constitution, sections 23(4), 23(5) and 23(6) of the Representation of the People Act, 1950, and in line with the Supreme Court judgment (of 2023)," it said.

Accordingly, technical consultations between UIDAI and the EC's technical experts 'are to begin soon,' it added.

The law allows voluntary seeding of voter rolls with the Aadhaar database.

Section 23 of the Representation of the People Act, 1950, as amended by the Election Laws (Amendment) Act, 2021, provides for electoral registration officers to require an existing or prospective elector to provide Aadhaar for establishing identity on a voluntary basis.

D. T. NEXT
Dated: 19.03.2025

# Ready for talks on publishing voter data on website, EC tells apex court

**NEW DELHI: The Supreme Court on Tuesday considered the Election Commission of India's stand to deliberate on the demand for uploading polling booth-wise voter turnout data on its website and asked the petitioners to make representations before the poll panel in 10 days.**



A Bench comprising Chief Justice Sanjiv Khanna and Justices Sanjay Kumar and KV Viswanathan was hearing two PILs filed by TMC MP Mahua Moitra and NGO Association for Democratic Reforms in 2019, respectively.

The PILs sought a direction to the poll panel to upload polling station-wise voter turnout data on its website within 48 hours of conclusion of polling in the Lok Sabha and Assembly elections.

Senior advocate Maninder Singh, appearing for the poll panel, said Chief Election Commissioner Gyanesh Kumar wanted to meet and discuss the grievance.

"Here is a new chief election commissioner now. The petitioners can meet him and it may be addressed," he said.

The CJI then said, "In the meanwhile, the counsel for Election Commission states that the petitioners (the NGO and the MP) may file a representation with the Election Commission and the EC will give them a hearing and inform them in advance. Let the representation be made in 10 days."

During the hearing, advocate Prashant Bhushan, appearing for the NGO, said there were huge discrepancies on the EVM count and the number of persons coming to cast vote at the polling stations.

"How did at the end of the day polling of 10 become 50 next morning needs to be explained. There is a discrepancy in the final list published and the ones who visit the polling station," argued senior advocate Abhishek Singhvi, appearing for Moitra.

The court adjourned the hearing in the July 28 week.

DT.NEXT
Dated: 19.03.2025

# New option in EPIC software to detect fake voters

**KOLKATA: Amid the Trinamool Congress highlighting the issue of 'fake voters', the Election Commission has decided to introduce a new option in its software for the detection of 'ghost voters', an official said on Monday.**

The new option would help the Electoral Registration Officers (EROs) find out if there are multiple names on a particular EPIC number, the official said.

"The chief electoral officers in all states have been informed about this decision," he said.



On Monday, a letter was sent to the chief electoral officers of the states informing them about a new module for correcting 'duplicate EPIC numbers', the official said.

Until now, the state election officers or the district EROs could not see the identity cards or EPIC numbers of voters from their end and thus missed out on those with similar EPIC numbers in other states, the official added.

Acting Chief Electoral Officer of West Bengal, Dibyendu Das on Monday held a virtual meeting with senior officials in the districts and briefed them about the decision, the official said.

Corrections in the voter list of West Bengal have been ordered to be completed by March 21, he added.

D.T. NEXT
Dated: 19.03.2025

# Kerala ensures 100% tribal voter inclusion, sets example

**THIRUVANANTHAPURAM: Setting an example for the country, Kerala has ensured 100 per cent voter registration in seven remote tribal settlements, the state government said on Tuesday.**

The achievement was announced by the government's Election Department, which, in a statement, said the initiative led by the Office of the Chief Electoral Officer of Kerala "aims to bring all eligible tribal voters into the democratic process and ensure full participation in upcoming elections."

As part of the first phase of this initiative, seven remote tribal settlements in Attappady—Mele Moolakkombu, Idavani, Mele Bhoothayar, Mele Thudukki, Galasi, Thazhe Thudukki, and Gothiyarkandi—were adopted and transformed into fully registered voter communities, it said.

With the successful completion of voter registration in Gothiyarkandi, the last of the seven settlements, Kerala has now achieved 100 per cent voter registration across these tribal settlements, it added.

Among them, Mele Moolakkombu was the first tribal settlement in Kerala to achieve



full voter registration. "This milestone is part of a broader effort to ensure that every eligible tribal citizen is included in the voter list, reinforcing the state's commitment to democratic rights and social inclusivity," the statement said.

The historic achievement was the result of the dedicated efforts of volunteers and officials who travelled for seven hours on foot to reach remote settlements like Mele Thudukki, it said.

Additionally, Chunav Pathshala, an election awareness programme conducted in the Kurumba language, was organised to educate tribal residents about their voting rights and responsibilities.

"Through these efforts, thousands of tribal individuals from Attappady have now been added to the electoral rolls, including 2,141 voters from the Irular and Kadar tribes, classified under Particularly Vulnerable Tribal Groups (PVTGs)."

"The initiative also addressed essential voter services such as address changes, corrections, and ID issuance, ensuring that tribal populations are not left out due to administrative barriers," the statement added.

DAILY THANTHI
Dated: 19.03.2025

### அரசியலமைப்பு சட்டத்துக்கு உட்பட்டு

# வாக்காளர் அட்டையுடன் ஆதார் எண் இணைக்கப்படும்

## தேர்தல் கமிஷன் உறுதி

புதுடெல்லி, மார்ச்.19- அரசியலமைப்பு சட்டத்துக்கு உட்பட்டு வாக்காளர் அட்டையுடன் ஆதார் எண் இணைக்கப்படும் என தேர்தல் கமிஷன் உறுதியளித்துள்ளது.

### தேர்தல் சட்டத்தில் திருத்தம்

வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைப்பதை கட்டாயமாக்க வேண்டும் என மத்திய அரசிடம் இந்திய தேர்தல் கமிஷன் பல ஆண்டுகளாக வலியுறுத்தி வருகிறது.

அதன் அடிப்படையில் கடந்த 2021-ம் ஆண்டு தேர்தல் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்பட்டது. அதன்படி மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1950 பிரிவு 23-ன் கீழ் வாக்காளர் பதிவு அலுவலகம் தன்னார்வ அடிப்படையில் வாக்காளர்களிடமிருந்து ஆதார் எண்ணை பெறலாம் என வலியுறுத்துகிறது.

அதே வேளையில் வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைப்பதை அரசு கட்டாயம் ஆக்கவில்லை. அதேபோல வாக்காளர் அடையாள எண்ணுடன் தங்களின் ஆதார் விவரத்தை இணைக்காதவர்கள் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படாது என அரசு உறுதியளித்துள்ளது. எனினும் சிலர் தாமாகவே முன்வந்து வாக்காளர் அடையாள அட்டையில் தங்களது ஆதார் எண்ணை இணைத்து வருகின்றனர்.

### தேர்தல் கமிஷன் ஆலோசனை

இந்த நிலையில் வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைப்பது தொடர்பாக உள்துறை செயலர், சட்டப்பேரவை செயலர் மற்றும் யுஐடிஏஐ அமைப்பின் தலைமை நிர்வாக அதிகாரி ஆகியோருடன் தேர்தல் கமிஷன் நேற்று ஆலோசனை நடத்தியது. இது தொடர்பாக தேர்தல் கமிஷன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

அரசியலமைப்பின் 326-வது பிரிவின்படி, இந்திய குடிமகனுக்கு மட்டுமே வாக்களிக்கும் உரிமையை வழங்க முடியும். அதேபோல ஆதார் ஒரு நபரின் அடையாளத்தை நிறுவுகிறது.

### விரைவில் தொடங்கும்...

எனவே, வாக்காளர் அடையாள அட்டையை ஆதாருடன் இணைப்பது அரசியலமைப்பின் 326, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950, பிரிவுகள் 23(4), 23(5) மற்றும் 23(6) ஆகிய பிரிவுகளின்படி மட்டுமே செய்யப்படும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் சுப்ரீம் கோர்ட்டின் வழிகாட்டுதல்களின்படியே இந்த பணிகள் மேற்கொள்ளப்படும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த பணியை எளிதாக்குவது தொடர்பாக யுஐடிஏஐ மற்றும் தேர்தல் கமிஷனின் தொழில்நுட்ப வல்லுநர்கள் இடையே தொழில்நுட்ப ஆலோசனைகள் விரைவில் தொடங்கும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

DAILY THANTHI
Dated: 19.03.2025

இணையதளத்தில்

# வாக்குச்சாவடி வாரியாக வாக்கு சதவீத விவரம் வெளியிடுவது பற்றி பேசத்தயார்

## சுப்ரீம் கோர்ட்டில் தேர்தல் கமிஷன் தகவல்

புதுடெல்லி, மார்ச்.19-
தேர்தல்களில் வாக்குச்சாவடி வாரியாக பதிவான வாக்குசதவீதத்தை இணையதளத்தில்வெளியிடுவது பற்றி மனுதாரர்களுடன் பேச விரும்புவதாக சுப்ரீம் கோர்ட்டில் தேர்தல் கமிஷன் தெரிவித்துள்ளது.

### 2 பொதுநல மனுக்கள்

திரிணாமுல் காங்கிரஸ் எம்.பி. மகுவா மொய்த்ராவும், ஜனநாயக சீர்திருத்த சங்கம் என்ற தொண்டு நிறுவனமும் சுப்ரீம் கோர்ட்டில் தனித்தனியாக 2 பொதுநல மனுக்கள் தாக்கல் செய்தன.

அவற்றில், நாடாளுமன்ற, சட்டசபை தேர்தல்கள் முடிந்த 48 மணி நேரத்தில், வாக்குச்சாவடிவாரியாகபதிவான வாக்கு சதவீத விவரத்தை தேர்தல் கமிஷனின் இணையதளத்தில்வெளியிட உத்தரவிட வேண்டும் என்று கூறப்பட்டு இருந்தது.

இந்த மனுக்களுக்கு கடந்த ஆண்டு மே 17-ந்தேதி தேர்தல் கமிஷன் பதில் அளிக்கசுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டது. அதற்கு தேர்தல் கமிஷன், அந்தகோரிக்கைக்குஎதிர்ப்பு தெரிவித்தது. தேர்தல் முறையில் குழப்பத்தைஏற்படுத்தும் என்று கூறியது.

### தேர்தல் கமிஷன் விருப்பம்

இந்நிலையில், நேற்று சுப்ரீம் கோர்ட்டில் தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, நீதிபதிகள் சஞ்சய் குமார், கே.வி.விஸ்வநாதன் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு இம்மனுக்கள் விசாரணைக்கு வந்தன.

தேர்தல் கமிஷன் சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் மனிந்தர் சிங், "புதிய தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ்குமார் வந்துள்ளார். அவர் மனுதாரர்களை சந்திக்க விரும்புகிறார். எனவே, மனுதாரர்கள் அவரை சந்தித்து பேசலாம்" என்று கூறினார்.

### மனு அளிக்கலாம்

அதை பதிவு செய்து கொண்ட தலைமை நீதிபதி கூறியதாவது:-

தேர்தல் கமிஷனிடம் மனுதாரர்கள் மனு அளிக்கலாம் என்று தேர்தல் கமிஷன் வக்கீல் கூறியுள்ளார்.

எனவே, மனுதாரர்கள் 10 நாட்களில் மனு அளியுங்கள். அவர்களை அழைத்து தேர்தல் கமிஷன் பேச்சுவார்த்தை நடத்தும்.

இவ்வாறு அவர் கூறினார்.

அடுத்தகட்ட விசாரணை, ஜூலை 28-ந் தேதி தொடங்கும் வாரத்துக்கு ஒத்திவைக்கப்பட்டது.

DAILY THANTHI
Dated: 19.03.2025

### விக்கிரவாண்டி இடைத்தேர்தல்:

# தி.மு.க. எம்.எல்.ஏ. வெற்றியை எதிர்த்த வழக்கு தள்ளுபடி

## ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, மார்ச்.19-

விக்கிரவாண்டி தொகுதி எம்.எல்.ஏ.வாக இருந்த புகழேந்தி காலமானதை அடுத்து கடந்த ஆண்டு ஜூலை மாதம் அந்த தொகுதிக்கு இடைத்தேர்தல் நடந்தது. அந்த இடைத்தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிட்ட அன்னியூர் சிவா 67,757 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இவரது வெற்றி செல்லாது என அறிவிக்கக் கோரி தேசிய மக்கள் சக்தி கட்சியைச் சேர்ந்த ராஜமாணிக்கம் என்பவர் சென்னை ஐகோர்ட்டில் தேர்தல் வழக்கு தொடரந்தார். அதில், விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் போட்டியிட வேட்பு மனுத்தாக்கல் செய்தேன். அதை முறையாக பரிசிலிக்காமல் தேர்தல் அதிகாரி நிராகரித்து விட்டார். விக்கிரவாண்டி இடைத்தேர்தல் முறையாக நடைபெறவில்லை. அதனால், அன்னியூர் சிவா வெற்றி பெற்றதை செல்லாது என அறிவிக்க வேண்டும்" என்று கூறியிருந்தார். இந்த வழக்கை நிராகரிக்கக் கோரி எம்.எல்.ஏ. அன்னியூர் சிவா, சென்னை ஐகோர்ட்டில் மனுத்தாக்கல் செய்தார். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி, ஜி.கே.இளந்திரையன், அன்னியூர் சிவாவின் மனுவை ஏற்றுக் கொண்டு அவருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட தேர்தல் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

DINAKARAN

Dated: 19.03.2025

# தேர்தல் ஆணைய உயர்மட்ட கூட்டம்




▶ வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதாரை இணைப்பது தொடர்பாக உயர்மட்ட கூட்டம் டெல்லியில் நேற்று நடந்தது. இதில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார், தேர்தல் ஆணையர்கள் சுக்பிர் சிங் சாந்து, விவேக் ஜோஷி, பல்வேறு அமைச்சக செயலாளர்கள் பங்கேற்றனர்.

DINAKARAN

Dated: 19.03.2025

ஆதார்-வாக்காளர் அட்டை இணைப்பு

# தேர்தல் கமிஷன், யுஐடிஏஐ விரைவில் ஆலோசிக்க முடிவு

புதுடெல்லி, மார்ச் 19: வாக்காளர் அடையாள அட்டையை ஆதாருடன் இணைப்பது தொடர்பாக யுஐடிஏஐ மற்றும் தேர்தல் ஆணைய நிபுணர்கள் இடையே தொழில்நுட்ப ஆலோசனை விரைவில் தொடங்க இருக்கிறது.

வாக்காளர் அடையாள அட்டையை ஆதாருடன் இணைப்பது தொடர்பான விவகாரம் குறித்து தேர்தல் ஆணையம், உள்துறை செயலாளர், சட்ட அமைச்சக செயலாளர், மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப துறை செயலாளர் மற்றும் ஆதார் அட்டைகளை வழங்கும் யுஐடிஏஐ சிஇஓ ஆகியோருடன் ஆலோசனை நடத்தியது.

இதைத் தொடர்ந்து, தேர்தல் ஆணையம் விடுத்த அறிக்கையில், 'வாக்களிக்கும் உரிமையை இந்திய குடிமகனுக்கு மட்டுமே வழங்க முடியும் என்றாலும், அரசியலமைப்பின் பிரிவு 326ன் படி, ஆதார் ஒரு நபரின் அடையாள சான்று மட்டுமே தவிர, குடியுரிமை ஆவணமல்ல. எனவே, வாக்காளர் அடையாள அட்டையை ஆதாருடன் இணைப்பது அரசியலமைப்பின் பிரிவு 326, மக்கள் பிரதிநிதித்துவ சட்டம், 1950ன் பிரிவுகள் 23(4), 23(5) மற்றும் 23(6) மற்றும் உச்ச நீதிமன்ற தீர்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மட்டுமே செய்யப்படும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதற்காக, யுஐடிஏஐ மற்றும் தேர்தல் ஆணையத்தின் தொழில்நுட்ப நிபுணர்கள் இடையே தொழில்நுட்ப ஆலோசனை விரைவில் தொடங்கப்பட உள்ளது' என கூறப்பட்டுள்ளது.

வாக்காளர்கள் அவர்களின் சுய விருப்பத்தின் அடிப்படையில் வாக்காளர் அட்டையை ஆதாருடன் இணைக்க சட்டம் அனுமதிப்பது குறிப்பிடத்தக்கது.

DINAKARAN

Dated: 19.03.2025

பூத் வாரியாக ஓட்டுப்பதிவு

# தேர்தல் கமிஷனுக்கு 10 நாள் கெடு

## மனுதாரர்களுடன் ஆலோசிக்க உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி,மார்ச் 19: மக்களவை மற்றும் சட்டப்பேரவை தேர்தல்களில் வாக்குப்பதிவு முடிவடைந்த 48 மணி நேரத்திற்குள் வாக்குச் சாவடி வாரியான வாக்காளர்களின் எண்ணிக்கை விவரங்களை அதன் இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிடுமாறு திரிணாமுல் காங்கிரஸ் எம்பி மஹுவா மொய்த்ரா, ஜனநாயக சீர்திருத்தங்களுக்கான சங்கம் தாக்கல் செய்த இரண்டு பொதுநல வழக்குகளை உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா, நீதிபதிகள் சஞ்சய் குமார், கே.வி.விஸ்வநாதன் ஆகியோர் அடங்கிய அமர்வு விசாரணை நடத்தி வருகிறது.

தன்னார்வ தொண்டு நிறுவனம் சார்பில் ஆஜரான வக்கீல் பிரசாந்த் பூஷன், 'வாக்குச்சாவடிகளில் ஓட்டு போட்டவர்களின் எண்ணிக்கை மற்றும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் எண்ணிக்கையில் பெரிய அளவில் முரண்பாடுகள் உள்ளன' என்றார். மஹுவா மொய்த்ரா சார்பில் ஆஜரான மூத்த வக்கீல் அபிஷேக் சிங்வி கூறுகையில்,' வாக்குப்பதிவு முடிந்தவுடன் அறிவிக்கப்பட்ட 10 ஓட்டுகள், எப்படி மறுநாள் காலை 50 ஆனது என்பதை விளக்க வேண்டும்' என்றார்.

தேர்தல் கமிஷன் சார்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் மணீந்தர் சிங் கூறுகையில்,' இப்போது புதிய தலைமை தேர்தல் கமிஷனர் பதவி ஏற்று இருக்கிறார். எனவே மனுதாரர்கள் புதிய தலைமைத் தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமாரை சந்தித்து குறைகளை தெரிவிக்கலாம்' என்றார்.

அப்போது தலைமை நீதிபதி,' மனுதாரர்கள் தங்கள் கோரிக்கைகளை தேர்தல் கமிஷனுக்கு சமர்ப்பிக்க வேண்டும். இதுதொடர்பாக அடுத்த 10 நாட்களுக்குள் அவர்களுக்கு தேர்தல் கமிஷன் நேரில் விளக்கம் அளிக்க வேண்டும்' என்று உத்தரவிட்டு ஜூலை 28ம் தேதி விசாரணையை ஒத்திவைத்தனர்.

DINAKARAN
Dated: 19.03.2025

### விக்கிரவாண்டி இடைத்தேர்தலில்

# திமுக வெற்றி செல்லும்

**உயர் நீதிமன்றம் தீர்ப்பு**

சென்னை, மார்ச் 19: விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் திமுக வேட்பாளர் வெற்றி பெற்றது செல்லும் என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

விக்கிரவாண்டி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக இருந்த புகழேந்தி காலமானதை அடுத்து கடந்த ஆண்டு ஜூலை மாதம் அந்த தொகுதிக்கு இடைத் தேர்தல் நடைபெற்றது. இந்த இடைத்தேர்தலில் திமுக சார்பில் போட்டியிட்ட அன்னியூர் சிவா போட்டியிட்டார். தேர்தல் முடிந்து வாக்குகள் எண்ணப்பட்ட நிலையில் அன்னியூர் சிவா, 67,757 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். இதையடுத்து, திமுக வேட்பாளர் அன்னியூர் சிவாவின் வெற்றியை எதிர்த்து தேசிய மக்கள் சக்தி கட்சியை சேர்ந்த ராஜமாணிக்கம் என்பவர் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். இந்த வழக்கு நீதிபதி ஜி.கே.இளந்திரையன் முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, தனக்கு எதிரான தேர்தல் வழக்கை நிராகரிக்கக் கோரி அன்னியூர் சிவா மனுத்தாக்கல் செய்தார். வழக்கை விசாரித்த நீதிபதி, ஜி.கே.இளந்திரையன், அன்னியூர் சிவாவின் மனுவை ஏற்று அவருக்கு எதிரான தேர்தல் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

DINAMALAR

Dated: 19.03.2025

# வாக்காளர் அட்டையுடன் ஆதார் இணைப்பு
## தேர்தல் கமிஷன் கூட்டத்தில் முடிவு

– நமது சிறப்பு நிருபர் –

டில்லியில் நேற்று தேர்தல் கமிஷன் தலைமையகத்தில், தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமார், தேர்தல் கமிஷனர்கள் சுக்பிர் சிங் சாந்து, விவேக் ஜோஷி தலைமையில், மத்திய உள்துறை செயலர் கோவிந்த் மோகன் உள்ளிட்டோர் பங்கேற்ற கூட்டம் நடந்தது.

### ஓட்டளிக்கும் அதிகாரம்

இந்த கூட்டத்தில் தான், வரலாற்று சிறப்பு மிக்க முடிவாக, வாக்காளர் அடையாள அட்டையுடன், ஆதார் அடையாள அட்டையை இணைப்பது என முடிவானது.

அதன்படி, வாக்காளர் அடையாள அட்டை எண்ணும், ஆதார் அடையாள அட்டை எண்ணும் விரைவில் இணைக்கப்பட உள்ளன.

இதுகுறித்து, நிருபர்களிடம் தலைமை தேர்தல் கமிஷனர் ஞானேஷ் குமார் கூறியதாவது:

அரசியல் அமைப்புச் சட்டத்தின் 326வது பிரிவின் படி, இந்திய குடிமகனுக்கு ஓட்டளிக்கும் அதிகாரம் வழங்கப்படுகிறது. அத்தகைய சூழலில், ஆதார் அடையாள அட்டை தான், அந்த நபரின் அடையாளத்தை வெளிப்படுத்துகிறது.




எனவே, தேர்தல் கமிஷன் வழங்கும் வாக்காளர் அடையாள அட்டை எண்ணுடன், ஆதார் அடையாள அட்டையை இணைப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் தொடர்பாக, ஆதார் அடையாள எண் ஆணையம், தேர்தல் கமிஷனின் தொழில்நுட்ப வல்லுநர்களுடன் கலந்தாலோசித்த பின் தக்க முடிவெடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

சில நாட்களுக்கு முன், பார்லிமென்டில், வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை எண்கள், பல மாநிலங்களில் ஒரே மாதிரியாக இருப்பதாக திரிணமுல் காங்கிரஸ் உள்ளிட்ட பல எதிர்க்கட்சித் தலைவர்கள் புகார் தெரிவித்தனர்.

### நலத்திட்ட பணிகள்

இதற்கிடையே, நேற்று நடந்த கூட்டத்தில், இந்த விவகாரம் தொடர்பாக, அனைத்து மாநிலங்களிலும் தலைமை தேர்தல் அதிகாரிகள் விரைவில், அனைத்துக் கட்சி தலைவர்களுடன் கலந்தாலோசித்து தக்க முடிவெடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

முன்னதாக, 2015 பிப்ரவரியில், பல மாநிலங்களில் வாக்காளர்கள் அடையாள அட்டை எண்களை, ஆதார் அடையாள அட்டை எண்ணுடன் இணைக்கும் பணி துவங்கியது.

'அப்போது அதற்கு முட்டுக்கட்டை போட்ட உச்ச நீதிமன்றம், 'ஆதார் அடையாள அட்டையை, அரசுகளின் நலத்திட்டம் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டும்' என உத்தரவிட்டது.

DINAMALAR

Dated: 19.03.2025

# தி.மு.க., – எம்.எல்.ஏ., வெற்றியை எதிர்த்த வழக்கு தள்ளுபடி

**சென்னை, மார்ச் 19–**

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில், தி.மு.க.,வின் அன்னியூர் சிவா வெற்றி பெற்றது செல்லும் என தெரிவித்த சென்னை உயர் நீதிமன்றம், அவரின் வெற்றியை எதிர்த்து தாக்கல் செய்த மனுவை தள்ளுபடி செய்தது.

விக்கிரவாண்டி தொகுதி எம்.எல்.ஏ.,வாக இருந்த புகழேந்தி மறைவை அடுத்து, அத்தொகுதிக்கு கடந்தாண்டு ஜூலையில் இடைத்தேர்தல் நடந்தது.

தி.மு.க., சார்பில் போட்டியிட்ட அன்னியூர் சிவா, 67,757 ஓட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.

தேர்தல் முறையாக நடக்கவில்லை என்பதால், சிவாவின் வெற்றி செல்லாது என அறிவிக்கக்கோரி, தேசிய மக்கள் சக்தி கட்சியை சேர்ந்த ராஜமாணிக்கம் என்பவர், சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அதை நிராகரிக்க கோரி, அன்னியூர் சிவாவும் மனு தாக்கல் செய்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஜி.கே.இளந்திரையன், அன்னியூர் சிவாவின் மனுவை ஏற்று, அவருக்கு எதிரான தேர்தல் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

DINAMANI
Dated: 19.03.2025

# வாக்குச் சாவடி வாரியான வாக்குப் பதிவு விவரத்தை பதிவேற்றம் செய்வது குறித்து ஆலோசிக்கத் தயார்

## உச்சநீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தகவல்




**புது தில்லி, மார்ச் 18:** மக்களவை, மாநில சட்டப்பேரவை தேர்தல்கள் வாக்குப் பதிவின்போது, வாக்குச்சாவடி வாரியான வாக்குப் பதிவு விவரத்தை தேர்தல் ஆணைய வலைதளத்தில் பதிவேற்றம் செய்வது தொடர்பாக அரசியல் கட்சிப் பிரதிநிதிகளுடன் ஆலோசிக்க விரும்புவதாக உச்சநீதிமன்றத்தில் தேர்தல் ஆணையம் தரப்பில் செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.

2019 மற்றும் கடந்த ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தல்கள் மற்றும் அண்மையில் நடந்து முடிந்த சில மாநில சட்டப்பேரவைத் தேர்தல்களில் பதிவான வாக்குகள் எண்ணப்பட்டபோது, தேர்தல் ஆணையம் வெளியிட்ட வாக்குப் பதிவு புள்ளி விவரங்களில் குளறுபடி இருந்ததாக எதிர்க்கட்சிகள் தரப்பில் புகார் தெரிவிக்கப்பட்டது.

ஆனால், 'வாக்குப் பதிவு மாலை 5 மணிக்கு நிறைவடையும் நிலையில், கடைசி நேரத்தில் வரும் சில வாக்காளர்களுக்கு டோக்கன்கள் வழங்கப்பட்டு, அவர்கள் மட்டும் மாலை 5 மணிக்குப் பிறகும் வரிசையில் காத்திருந்து வாக்களிக்க அனுமதிக்கப்படுவர். இவ்வாறு கடைசி நேரத்தில் பதிவாகும் வாக்குகளின் புள்ளிவிவரம் வெளியிடுவதில் தாமதமாவதே, குளறுபடிக்குக் காரணம். இது வாக்குச்சாவடிகளில் இருக்கும் அரசியல் கட்சிகளின் முகவர்களுக்கும் நன்கு தெரியும். எனவே, இதில் மோசடி எதுவும் இல்லை' என்று தேர்தல் ஆணையம் விளக்கமளித்தது.

இதுதொடர்பாக திரிணமூல் காங்கிரஸ் மஹுவா மொய்த்ரா, ஜனநாயக சீர்திருத்தத்துக்கான சங்கம் என்ற தன்னார்வ அமைப்பு ஆகியவை சார்பில் உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில், 'மக்களவை, மாநில சட்டப்பேரவை தேர்தல்கள் வாக்குப் பதிவின்போது, வாக்குச்சாவடி வாரியான வாக்குப் பதிவு விவரத்தை, தேர்தல் முடிந்த 48 மணி நேரத்துக்குள் தேர்தல் ஆணைய வலைதளத்தில் பதிவேற்ற உத்தரவிட வேண்டும்' என்று வலியுறுத்தப்பட்டது.

இந்த மனு உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சஞ்சீவ் கன்னா, நீதிபதிகள் சஞ்சய் குமார், கே.வி.விஸ்வநாதன் அடங்கிய அமர்வில் செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு வந்தது.

அப்போது தேர்தல் ஆணையம் தரப்பில் ஆஜரான மூத்த வழக்குரைஞர் மனீந்தர் சிங், 'இந்த விவகாரம் தொடர்பாக தலைமைத் தேர்தல் ஆணையராக புதிதாக பதவியேற்றுள்ள ஞானேஷ் குமார், அரசியல் கட்சி பிரதிநிதிகளைச் சந்தித்து ஆலோசிக்கத் திட்டமிட்டுள்ளார். எனவே, இதுகுறித்து ஆலோசிக்க அடுத்த 10 நாள்களுக்குள் அரசியல் கட்சிகள் தங்களின் கருத்துகளை தேர்தல் ஆணையத்திடம் சமர்ப்பிக்கலாம்' என்றார்.

இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள் விசாரணையை ஜூலை கடைசி வாரத்துக்கு ஒத்திவைத்தனர்.

DINAMANI

Dated: 19.03.2025

# வாக்காளர் அட்டை - ஆதார் எண் இணைப்பு: விரைவில் தொழில்நுட்ப ஆலோசனை

## தேர்தல் ஆணையம் தகவல்

புது தில்லி, மார்ச் 18: 'நடைமுறையில் உள்ள சட்டம் மற்றும் உச்சநீதிமன்ற அறிவுறுத்தலின்படி, வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைக்கும் பணி மேற்கொள்ளப்படும். இதுதொடர்பாக, இந்திய தனித்துவ அடையாள ஆணைய (யுஐடிஏஐ) நிபுணர்களுடன் விரைவில் தொழில்நுட்ப ஆலோசனைகள் தொடங்கப்பட உள்ளன' என்று தேர்தல் ஆணையம் செவ்வாய்க்கிழமை தெரிவித்தது.

இதுதொடர்பாக மத்திய உள்துறைச் செயலர், சட்டத் துறைச் செயலர் மற்றும் யுஐடிஏஐ தலைவர் ஆகியோருடன் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தில்லியில் செவ்வாய்க்கிழமை ஆலோசனை மேற்கொண்ட நிலையில், இத்தகவலை தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ளது.

இதுகுறித்து தேர்தல் ஆணையம் செவ்வாய்க்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பில் மேலும் கூறியிருப்பதாவது:

அரசமைப்புச் சட்டப் பிரிவு 326-இன் படி இந்திய குடிமகனுக்கு மட்டுமே இந்தியாவில் வாக்களிக்கும் உரிமையை வழங்க முடியும். அதே நேரம், ஆதார் அட்டை என்பது ஒரு நபரின் அடையாளத்தை உறுதி செய்யும் ஆவணமாக உள்ளது.

எனவே, வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண் இணைக்கும் பணி என்பது, அரசமைப்புச் சட்டப் பிரிவு 326, மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம் 1950-இன் பிரிவுகள் 23(4), 23(5), 23(6) மற்றும் உச்சநீதிமன்றம் இதுதொடர்பாக கடந்த 2023-இல் அளித்த தீர்ப்பு ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

இதுதொடர்பாக, யுஐடிஏஐ நிபுணர்களுடன் விரைவில் தொழில்நுட்ப ஆலோசனையை தேர்தல் ஆணையம் தொடங்க உள்ளது என்று தெரிவித்துள்ளது.

வெவ்வேறு மாநிலங்களில் உள்ள பலருக்கு ஒரே மாதிரி வாக்காளர் அடையாள எண் வழங்கப்பட்ட விவகாரம் பெரும் சர்ச்சையாக வெடித்துள்ள நிலையில், வாக்காளர் அடையாள அட்டையுடன் ஆதார் எண்ணை இணைப்பதற்கான பணிகளை தேர்தல் ஆணையம் தீவிரப்படுத்தியுள்ளது.

முன்னதாக, 'வாக்காளர் பட்டியலை ஆதார் தரவுத் தளத்துடன் தானாக முன்வந்து இணைக்க சட்டம் அனுமதிக்கிறது. ஆதார், வாக்காளர் அட்டை இணைக்கும் பணி செயல்முறை சார்ந்தது; இதற்கென எந்தவித இலக்கோ அல்லது காலக்கெடுவோ நிர்ணயிக்கப்படவில்லை. வாக்காளர் பட்டியலுடன் ஆதார் விவரங்களை இணைக்காதவர்களின் பெயர்கள் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படாது' என்று மத்திய அரசு நாடாளுமன்றத்தில் அண்மையில் தெரிவித்தது குறிப்பிடத்தக்கது.